# SNS academy

an International CBSE Finger Print School
Coimbatore

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

I. நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்
மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை
மரபுவழிப் பட்ட சொல்லின் ஆன
மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்

1.பொருள் தருக. விசும்பு –
2.பொருள் தருக. மரபு –
3.இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் _______ ஆகும்
4.இப்பாடலின் ஆசிரியர் _________ ஆவார்.
5.இருதிணை விளக்கம் தருக.
6.பொருள் தருக. தழாஅல், வழாஅமை, மயக்கம், வையகம்
7.தொல்காப்பியம் ___________ அதிகாரங்களைக் கொண்டுள்ளது
8.தமிழ் மொழியில் பழமையான இலக்கண நூல் _______ ஆகும்.
9.செய்யுளுக்கு அழகு _______ ஆகும்.
10.தொல்காப்பியத்தில் உள்ள அதிகாரங்கள் ஒவ்வொன்றும் _________ இயல்களைக் கொண்டுள்ளது.
11. பிரித்து எழுதுக. ஐம்பால், ஐம்பூதம், இருதிணை.